| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயிர்த்துளி | | |
|---|---|---|
| மழைநீரை சேமிப்பீர் ! | | குடிநீரை பெருக்குவீர்!! |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற **26.03.2018**ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

**1)** இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் பிப்ரவரி **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம். **(க.எண்.1464/2016/சி1)**

**2)** இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் பிப்ரவரி **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம். **( க.எண்.1464/2016/சி1)**

**3)** இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் பிப்ரவரி **2018** ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம். **( க.எண். 1464/2016/சி1)**

**4)** இந்நகராட்சியின் **2017–2018**ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடும், **2018–2019**ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக்குறிப்பு</u> :** ஒப்புதல் அளிக்கலாம். **(க.எண்.143/2017/பி4)**

**5)** இந்நகராட்சி **2018–19** ம் ஆண்டு குத்தகை இனங்களுக்கு **07.03.2018** அன்று **3–**வது முறையாக மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை, கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ( ஆண்டுக்கு) ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| **1** | கோபிசெட்டிபாளையம் நகராட்சி தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | **1)**திரு.G.V.மாதேஸ்வரன், கோபி<br>**2)** திரு.M.விஸ்வநாதன், கோபி<br>**3)** திரு.G.N.செல்வராஜ், கோபி | **19,99,999.99**<br>**19,60,000/–**<br>**19,55,000/–** | இல்லை<br>“ |
| **2** | நகராட்சி பேருந்து நிலையத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | **1)** திரு. G.N.செல்வராஜ், கோபி<br>**2)** திரு.G.P.மணியன், கோபி | **7,40,000/–**<br>**7,00,000/–** | “<br>“ |
| **3** | வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடம் (ம) குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | **1)** திரு.மொ.த.ரமேஷ், மொடச்சூர்<br>**2)** திருமதி.S. மகேஸ்வரி, மொடச்சூர் | **96,444/–**<br>**50,000/–** | “ |



**<u>அலுவலகக்குறிப்பு</u> :**

வரிசை எண் 1ல் கண்ட குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.19,99,999.99 க்கு திரு. G.V.மாதேஸ்வரன் என்பவர் அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது சென்ற ஆண்டு குத்தகைத்தொகை ரூ.19,95,455/– ஐ விட ரூ.4,544.99/– அதிகமாகவும், 3 ஆண்டு சராசரி தொகை ரூ.19,01,939/–ஐ விட ரூ.98,060.99/– கூடுதலாகவும் உள்ளது. சென்ற ஆண்டு குத்தகைத்தொகை மற்றும் 3 ஆண்டு சராசரித் தொகையை விட அதிகமாக உள்ளதால் திரு. G.V.மாதேஸ்வரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.19,99,999.99 ஐ மன்றம் உறுதி செய்யலாம்.

வரிசை எண் 2ல் கண்ட குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.7,40,000/–க்கு திரு. G.N.செல்வராஜ் என்பவர் அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது சென்ற ஆண்டு குத்தகைத்தொகை ரூ.7,33,316/– ஐ விட ரூ.6,684/– அதிகமாகவும், 3 ஆண்டு சராசரி தொகை ரூ.6,98,950/–ஐ விட ரூ.41,050/– கூடுதலாகவும் உள்ளது. சென்ற ஆண்டு குத்தகைத்தொகை மற்றும் 3 ஆண்டு சராசரித்தொகையை விட மேற்படி ஒப்பந்தப்புள்ளித்தொகை அதிகமாக உள்ளதால் திரு. G.N.செல்வராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.7,40,000/– ஐ மன்றம் உறுதி செய்யலாம்.

வரிசை எண் 3ல் கண்ட குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.96,444/– க்கு திரு.மொ.த.ரமேஷ் என்பவர் அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது சென்ற ஆண்டு குத்தகைத்தொகை ரூ.91,510/– ஐ விட ரூ.4,934/– அதிகமாகவும், 3 ஆண்டு சராசரி தொகை ரூ.87219/–ஐ விட ரூ.9225/– கூடுதலாகவும் உள்ளது. சென்ற ஆண்டு குத்தகைத்தொகை மற்றும் 3 ஆண்டு சராசரித் தொகையை விட அதிகமாக உள்ளதால் திரு.மொ.த.ரமேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.96,444/– ஐ மன்றம் உறுதி செய்யலாம்.
(க.எண்.2400/17/அ3)

6) இந்நகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்ககம் (NULM) திட்டத்தின்கீழ் வீடற்றவர்களுக்கான இரவு நேர தங்கும் விடுதி (SUH) கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பத்திரிக்கையில் விளம்பரம் செய்து கொடுத்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.2678/– ஐ ( ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்து எட்டு மட்டும்) ` Bright Adverdising ` நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

7) நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு இந்நகராட்சியின் மூன்றாவது தவணை பங்குத்தொகை ரூ.7,80,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) செலுத்த கேட்டு நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் Roc.No.30322/2012/E3 நாள்.8.3.2018 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை ‘ நகர நிர்வாக கட்டிட சங்கம் ‘ சென்னை என்ற பெயரில் செலுத்துவதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

8) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ராமர் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள Burial Ground – ல் உள்ள windows - ற்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு மோட்டார் மற்றும் குழாய்கள் பதிப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் ( ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

9) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் பழுதடைந்துள்ள Service Wire – யினை மாற்றியமைக்கவும், புதியதாக Fan மற்றும் Light ஆகியவை பொருத்திடவும் உத்தேச செலவினம் ரூ.50,000/– ( ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும் ) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

10) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 ல் உள்ள CKK நகரில் disposal point இல்லாததால் குழாய் மூலம் ஐயப்பா நகர் மழைநீர் வடிகாலில் கொண்டு சென்று விடுவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

11) கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 13, மின்நகர் கதவு எண் 27, 28 வீட்டின் மீது சாய்ந்து பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உள்ள வேப்பமரம், மரமல்லி மரக்கிளைகளை மட்டும் வெட்டி அப்புறப்படுத்தி எடுத்துக்கொள்ளும் பணிக்கு 09.03.2018 ல் பொது ஏலம் கோரப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.450/– ( ரூபாய் நானூற்றி ஐம்பது மட்டும்) திரு.K.R.ஆறுமுகம், 3 சிலேட்டர் உறவுஸ் வீதி, கோபி என்பவர் கோரியுள்ளார். மேற்படி ஏலத்தினை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.450/– ( ரூபாய் நானூற்று ஐம்பது மட்டும்) திரு. K.R.ஆறுமுகம், 3 சிலேட்டர் உறவுஸ் வீதி, கோபி என்பவரின் ஏலத்தினை அங்கீகரிக்கலாம்.

12) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான முருகன்புதூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவிகள் பாதுகாப்பு கருதி சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கு உத்தேச செலவினம் ரூ.1,90,000/– ( ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

13) இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ள ILL (Internet leased Line)–ற்கு 2018–19ஆம் ஆண்டிற்கான வாடகை ரூ.40903/–ஐ (ரூபாய் நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து மூன்று மட்டும்) AO, Cash BSNL என்ற பேயரில் செலுத்திடவும் வரும் ஆண்டுகளில் மேற்படி இணைப்பிற்கான கட்டணத்தினை தொடர்ந்து செலுத்திடவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

14) இந்நகராட்சி 2017–2018ம் ஆண்டுக்கான வரி மற்றும் வரியினங்கள் வசூலிக்க வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு பொது மக்களை வரி செலுத்த கோரி ஆட்டோ மூலம் மைக்செட் வைத்து விளம்பரம் செய்திட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.70,000/– க்கு இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானம் எண் 156 நாள்.30.10.2017 ல் அனுமதி பெறப்பட்டது. அனுமதி பெறப்பட்ட தொகை செலவு செய்து முடிக்கப்பட்டது. மேலும், வசூல் வரி மற்றும் வரியினங்கள் தொடர்ந்து 100 சதவீதம் இலக்கினை எட்டி வருவதாலும், நடப்பாண்டுக்கும் அதே இலக்கினை எட்ட ஏதுவாக மீண்டும் ஆட்டோ மூலம் மைக் வைத்து பொதுமக்களுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும், அதற்காகும் கூடுதல் செலவினம் ரூ.23,000/– ஐ பொது நிதியில் செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதி அளிக்கலாம். (க.எண்.2320/2017/அ1)

15) கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகம் தொடர்பாக Existing Zonation மற்றும் Proposed Zonation வரைபடம் ` AUTO CAD ` - ல் AO அளவில் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி Zonation Map AO அளவில் தயார் செய்து கொடுத்தமைக்கான செலவினம் ரூ.20,700/– ஆகும். மேற்படி செலவினத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (க.எண்.951/2018/இ1)

16) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தூய்மை பாரத இயக்கம் IHHL திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு தேவையான இடங்களை தேர்வு செய்து சம்மந்தப்பட்ட பயனாளிகளிடம் விண்ணப்பங்களை பெற்று தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், இதற்காகும் செலவினங்களை CSR நிதி அல்லது நகராட்சி நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டும். பின்னர் SBM நிதியிலிருந்து விடுவிக்கப்படும் என்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் 02.03.2018 ம் நாளிட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2297/2009/பி3 நாள்.08.03.2018ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் அவர்களின் அறிவுரையின் படி இந்நகராட்சியில் பணியாற்றும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மூலமாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு தகுதியான இடங்கள் மற்றும் பயனாளிகள் 38 நபர்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி, 38 நபர்களுக்கு கழிப்பிடங்கள் கட்டுவதற்கு கீழ்காணும் விபரப்படி செலவினம் ரூ.3,04,000 ஆகும்.தற்போது மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இதன் பின்னர் SBM நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் வருவாய் மற்றும் மூலதன நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. மத்திய அரசு பங்குத்தொகை | - 38 x 4000 = | 1,52,000 |
| 2. மாநில அரசு பங்குத்தொகை | - 38 x 2000 = | 76,000 |
| 3. நகராட்சி பங்குத்தொகை | - 38 x 2000 = | 76,000 |
| மொத்தம் | = | 3,04,000 |

அலுவலகக்குறிப்பு அனுமதி அளிக்கலாம். ( ந.க.எண் 851/2018/எச்1 )

17) இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் 2018-2019 ம் ஆண்டில் செயல்படத் தேவையான கீழ்காணும் செலவினங்களை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000 ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1. பால் மற்றும் காய்கறிகளுக்கு | ரூ. 5,00,000 |
| 2. எரிவாயு உருளை | ரூ. 5,00,000 |
| 3. மளிகை பொருட்கள் | ரூ. 8,00,000 |
| 4. அம்மா உணவக பணியாளர்களுக்கான ஊதியம் | ரூ. 10,75,000 |
| 5. அரிசி | ரூ. 25,000 |
| 6. இதர செலவினம் | ரூ. 1,00,000 |
| மொத்தம் | ரூ. 30,00,000 |

அலுவலக குறிப்பு

மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கோள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண் 3422/2014/எச்1

18) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு 2018 – 2019 ம் நிதியாண்டுக்கு தேவையான கீழ்காணும் உத்தேச செலவினங்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**உத்தேச செலவினம்**

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|
| 1 | கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் இதர இனங்கள் வாங்க | 12,00,000 |
| 2 | நோய்க்கிருமிகளை அழிக்க தேவையான பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்பு தூள் மற்றும் பினாயில் வாங்க | 3,50,000 |
| 3 | துப்புரவு பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க | 6,00,000 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் மற்றம் இதர பணியாளர்களுக்கு சீருடைகள், தையல் கூலி மற்றும் காலணிகள் வழங்க | 6,00,000 |
| 5 | துப்புரவு பிரிவு வாகனங்கள் பராமரிப்பு பணிகள் செய்ய, டயர் டியூப், டீசல், ஆயில், கிரீஸ், பேட்டரி வாங்க, சாலை வரி காப்பீட்டு தொகை செலுத்த | 28,00,000 |
| 6 | தூய்மை பணி மேற்கொள்ளும் தள்ளு வண்டிகள் பழுது பார்க்கவும், டயர், டியூப் வாங்குவதற்கும். | 3,00,000 |
| 7 | 12 வார்டுகளில் தனியார் மூலம் முதல்நிலை சேகரம் செய்யும் பணிகளுக்கு | 1,65,00,000 |
| 8 | நகராட்சி பள்ளிகளில் தூய்மைப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க | 38,00,000 |
| 9 | டம்பர் பின்கள் புதிதாக வாங்கவும் பழுது பார்ப்பதற்கும் | 6,00,000 |
| 10 | பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பைண்டிங் செய்து பராமரிக்க | 15,000 |
| 11 | தகவல், கல்வி தொடர்பு (IEC) நடவடிக்கைகளுக்கு | 1,50,000 |
| 12 | தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும், வெறிநாய்க்கடி தடுப்பூசி போடவும். | 1,00,000 |
| 13 | ஆடுவதை சாலையில் வதை செய்வதற்காக கொண்டுவரும் ஆடுகளை பரிசோதனை செய்ய கால்நடை மருத்துவருக்கான ஆய்வுக்கட்டணம் | 1,00,000 |
| 14 | கலவை உரக்கிடங்கில் கொட்டப்படும் குப்பைகளை இயந்திரங்களை கொண்டு தள்ளுவதற்கு | 7,00,000 |
| 15 | டெங்கு கொசு ஒழிப்பு தினக்கூலி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள | 35,00,000 |
| 16 | பொதுசுகாதாரப்பிரிவு நாளிதழ் விளம்பரக் கட்டணம் | 2,00,000 |

**அலுவலக குறிப்பு :** வரிசை எண் 8 ல் உள்ள இனத்திற்காகும் செலவினங்களை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
வரிசை எண் 8 ஐ தவிர்த்து மற்ற இனங்களுக்கு ஆகும் செலவினங்களை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.945/2018/எச்1)

19) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 21.03.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரை சுத்தகரிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும் 2018–19ஆம் ஆண்டிற்கு திரவ குளோரின் வாங்குதல் | 6,90,000 | M/s.ஸ்ரீநிகேதா எண்டர்பிரைசஸ் | **0.94** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.ஸ்ரீதரன் கெமிக்கல்ஸ் | **2.80** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் | 6,00,000 | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | **0.59** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள பல வகையான நீர் மூழ்கி மின் மோட்டார்கள், கம்பரசர்கள், ஜெட் மற்றும் மோனோபிளாக் மோட்டார்கள், பேனல் போர்டுகள், ஸ்டார்ட்டர்கள், ஒயரிங் மற்றும் பைப் லைன்கள் **2018–19**ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | **3.35** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| **3** | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரினை சுத்தகரிப்பு செய்ய பயன்படுத்தும் படிகாரம் (Sulphate of Alumina) **2018–19**ஆம் ஆண்டிற்கு வாங்குதல் | **1,00,000** | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | **0.53** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | **15.79** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| **4** | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் சுலீஸ் வால்வுகள், NRV வால்வுகள் புதியதாக மாற்றுதல் | **3,95,000** | M/s. ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் | **0.05** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. குமரன் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் | **1.03** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.**1**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஸ்ரீநிகேதா எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.**2**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.**3**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
4. வ.எண்.**4**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஹைட்ரோமெக் எஞ்சினீரிங் ஓர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

20) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு **21.03.2018** தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| **1** | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் தனியார் சேவை மூலம் **(2018–2019)** வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | **9,90,000** | ஸ்ரீ சரவணன் & கோ ஒப்பந்ததாரர் | **0.48** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | T.சுகுமார் ஒப்பந்ததாரர் | **3.35** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| **2** | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நாய்க்கன்காடு, ஜெயராம் நகராட்சி நடுநிலைபள்ளி, நகராட்சி நடுநிலைபள்ளி டவுன், வேங்கைம்மையார் துவக்கப்பள்ளி, வேங்கைம்மையார் உயர்நிலைப்பள்ளி, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆகிய நகராட்சி பள்ளிகள் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவி (RO Plant) புதிய உதிரிபாகங்கள் மாற்றி மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | **95,000** | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் | **0.56** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | **1.95** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.**1**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஸ்ரீசரவணன் & கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.**2**–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

21) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 22.03.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள நகராட்சி வணிக வளாகத்திலுள்ள கழிப்பிடங்களுக்கு செப்டிக் டேங் அமைத்தல் | 1,20,000 | R.மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 0.91 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | D.தினேஷ் ஒப்பந்ததாரர் | 2.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் நுழைவாயில் வளைவு அமைத்தல் | 2,00,000 | P.கந்தசாமி ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 0.81 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிக்கு UPS விநியோகம் மற்றும் பொருத்துதல் பணி | 1,00,000 | M/s.ஜெயம் கம்ப்யூட்டர்ஸ் | 0.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.பி.எஸ்.ஆர் கம்ப்யூட்டர்ஸ் | 1.26 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள R.மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள P.கந்தசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.ஜெயம் கம்ப்யூட்டர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

22) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் வடபுறம் கிழ மேற்காக உள்ள மழைநீர் வடிகாலுக்கு பொதுமக்கள் பாதுகாப்பிற்காக மூடுகல் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி மூடுகல் (RCC Slab) அமைக்கப்பட உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

23) நகராட்சிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ( சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83ல் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.15.01.2018 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

24) இந்நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் ஓட்டுநர் ஆக பணிபுரியும் திரு.ஆ.ப. இராமசாமி, 20.03.1998 முதல் ஓட்டுநர் ஆக பணிபுரிந்து 20.03.2008 ல் ஓட்டுநர் பணியிடத்தில் 10 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றியுள்ளதால் ரூ.500/— க்கான இந்திரவிகாஸ் பத்திரம் வழங்குமாறு கோரியுள்ளதை துப்புரவு அலுவலர் அவர்களும் 14.02.2018 ம் தேதிய குறிப்பில் பரிந்துரை செய்துள்ளார்கள். எனவே திரு.ஆ.ப.இராமசாமி, ஓட்டுநர் அவர்களுக்கு ரூ.500/— க்கான இந்திர விகாஸ் பத்திரம் வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அரசு ஆணை 204 P & AR நாள்.21.06.1993 ன்— ல் 10 ஆண்டுகள் மாசற்ற முறையில் ஓட்டுநர் ஆக பணிபுரிந்த பணியாளருக்கு ரூ.500/— க்கான இந்திரவிகாஸ் பத்திரம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதால் திரு.ஆ.ப. இராமசாமி, ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கலாம்.
(க.எண்.2632/2017/சி1)

25) இந்நகராட்சிக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், க.ச.எண்.74, நகரளவு வார்டு A, பிளாக் 7, நகரளவு எண் 5/1 Part உள்ள **1.88 1/2** ஏக்கர் இடமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் **1** லும் கல்வி உபயோக இடமாக உள்ளது. (Educational use zone) இதனை குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தருமாறு திரு.M.நந்தகுமார் மற்றும் திரு.M.ராதாகிருஷ்ணன் ஆகியோர் விண்ணப்பம் செய்துள்ளார்.

மனையிடமானது சத்தி பிரதான சாலையினை ஒட்டி அமைந்துள்ள அமலா கல்வி நிறுவனத்தின் அருகில் உள்ளது. மனையிடத்திற்கு அருகில் வடபுறம், மேபுறம் மற்றும் கிழபுறங்களில் குடியிருப்பு மனைப்பிரிவுகள் அமைந்துள்ளன. மேலும், **(1)** மனையிடம் காலியாக உள்ளது. மனை இடம் மனுதாரருக்கு சொந்தம் என்பதற்குரிய ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

**(2)** மனை இடத்தின் வழியே உயர்மின் அழுத்தக்கம்பி ஏதும் இல்லை.
**(3)** மனைக்கு அருகில் சுடுகாடு, இடுகாடு மற்றும் நீர்நிலைகள் ஏதும் இல்லை.
**(4)** மனையிடத்தினைச் சுற்றிலும் உள்ள பகுதிகள் அபிவிருத்தியடைந்து குடியிருப்புப்பகுதியாக உள்ளது.

மனுதாரரின் மனையிடம் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் **1** ல் அமைந்துள்ளது. மனையிடம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் **1** ன் வரைபடத்திலும் கல்வி உபயோக இடமாக (Educational use zone) உள்ளதாலும் முழுமைத்திட்டத்தின்படியும், கல்வி உபயோக இடமாக உள்ளதாலும் குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தருமாறு கோரிய கருத்துருக்களை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மனுதாரரின் நில உபயோக மாற்றம் பெற உத்தேசித்துள்ள வீரபாண்டி கிராமம், க.ச.எண்.**74**, வார்டு 7, நகரளவு எண் 5/1 Part ல் உள்ள **1.88 1/2** ஏக்கர் இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் **1** லும், கல்வி உபயோகம் (Educational use zone) ஒதுக்கீட்டை மாற்றி குடியிருப்புப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தருமாறு கோரிய கருத்துருக்களை நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம். **(க.எண்.868/2018/எப்1)**

26) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட முருகன்புதூர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வேங்கம்மையார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நாய்க்கன்காடு நகராட்சி துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு செராமிக் முலாம் பூசப்பட்ட பச்சைநிற வண்ணப்பலகை (8”x4”) ஆசிரியர்களுக்கும் மற்றும் தானியியங்கி மின்சார மணி ஆகியவற்றை விநியோகித்து பொருத்துவதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.**8,85,000/–**ஐ இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

27) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி நடுநிலைப்பள்ளி, (டவுன்) ஜெயராம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்கு செராமிக் முலாம் பூசப்பட்ட பச்சைநிற வண்ணப்பலகை (8”x4”) ஆசிரியர்களுக்கு மற்றும் தானியியங்கி மின்சார மணி ஆகியவற்றை விநியோகித்து பொருத்துவதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.**8,15,000/–**ஐ இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

28) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, மொடச்சூர் நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் வேங்கம்மையார் நகராட்சி துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு செராமிக் முலாம் பூசப்பட்ட பச்சைநிற வண்ணப்பலகை (8”x4”) ஆசிரியர்களுக்கும் மற்றும் தானியியங்கி மின்சார மணி ஆகியவற்றை விநியோகித்து பொருத்துவதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.**6,10,000/–**ஐ இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

29) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பைகளை சிறுதுகள்களாக வெட்டி உரமாக்குவதற்காக Shredding Machine Belt Conveyor மற்றும் Sanitary napkin போன்றவற்றை எடுக்கக்கூடிய Incinerator ஆகியவை வாங்கி பொருத்தப்பட வேண்டியுள்ளது. மேற்படி இயந்திரங்களை வாங்கி பொருத்துவதற்கும் இத ற்கான உத்தேச செலவினம் ரூ.7,50,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

30) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள (1) வடக்கு பூங்கா வீதி பூங்கா, (2)சி.கே.கே.நகர் பூங்கா, (3) ஆஞ்சநேயா நகர், 4. மின் நகர் ஆகிய பூங்காக்களில் சேகரம் ஆகும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கு Micro Composting Centre (MCC) அமைக்கப்பட உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் ஆகும். மேற்படி MCC அமைப்பதற்கும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

31) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள 1) வாஸ்து நகர், 2.பெருமாள்சாமிநகர், 3. அம்பிகை நகர், ஆகிய பூங்காக்களில் சேகரம் ஆகும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கு Micro Composting Centre (MCC) அமைக்கப்பட உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்படி MCC அமைப்பதற்கும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

32) இவ்வலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் அறிவிப்பு வழங்கும் கணினி பேப்பர் மற்றும் கணினி வரிவிதிப்பு இரசீதுகள் சேவை மைய இரசீதுகள் 2018—2019 ம் ஆண்டிற்கு தேவைக்கு ஏற்ப அவ்வப்போது அங்கீகரிக்கபட்ட அரசு கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/— க்கு ( ரூபாய் ஏழு லட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

33) இவ்வலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் 2018—19 ம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட அரசு கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/— ( ரூபாய் ஆறு லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

கோபிசெட்டிபாளையம்
நாள். 22.03.2018.

தனி அலுவலர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

32) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொசு தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட கீழ்காணும் விபரப்படியான பொருட்கள் அனைத்தும் பலமுறை பழுது நீக்கம் செய்து பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. கீழ்காணும் பொருட்களை இனியும் ஏலம் விடாமல் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டிருந்தால் இத்துப்போவதுடன் நகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்படும். எனவே, நகராட்சிக்கு வருவாயை ஈட்டும் நோக்கில் பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

சேமிப்பு கிடங்கில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பொருட்களின் விபரம்

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டம்பர் பின்கள் | 30 |
| 2 | Fogging இயந்திரம் | 04 |
| 3 | தள்ளு வண்டிகள் | 08 |
| 4 | சைக்கிள் வண்டிகள் | 08 |
| 5 | தகர டப்பா 20 லிட்டர் ( கொசு மருந்து வாங்கியது ) | 20 |
| 6 | தகர டப்பா 05 லிட்டர் ( கொசு மருந்து வாங்கியது ) | 25 |
| 7 | பிளாஸ்டிக் கேன் 10 லிட்டர் ( கொசு மருந்து வாங்கியது ) | 27 |
| 8 | பிளாஸ்டிக் கேன் 20 லிட்டர் ( கொசு மருந்து வாங்கியது ) | 04 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

கோபிசெட்டிபாளையம்
நாள். 22.03.2018.

தனி அலுவலர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி